# TET – 2013 PAPER II – COMMON SUBJECTS WITH MATHS SCIENCE

## பகுதி I
## குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல்

**இப்பகுதியில் 30 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

1. செயல்களில் மேலான நிலையை அடைய முற்படுதலே
   A. ஒருங்கிணைந்த ஆளுமை B. படைப்பாற்றல்
   **C. அடைவூக்கம்** D. பொருத்தபாடு

2. பின்வருவனவற்றுள் ஸ்ப்ரேங்கரின் ஆளுமை வகைப்பாட்டில் இடம் பெறாத வகை எது?
   A. கொள்கை B. அழகுணர்ச்சி
   C. அரசியல் **D. பொருள் சார்ப்பு**

3. முதல் மின்னஸோடா பலவாளுமைப் பண்புகள் பற்றிய பட்டியலில் இடம் பெற்ற மொத்த உருப்படிகளின் எண்ணிக்கை
   A. 120 B. 320
   C. 550 D. 330 **Ans: 567**

4. வார்த்தைகள் மற்றும் எண்களை வேகத்துடனும் துல்லியமாகவும் பதிவு செய்யும் திறன்
   **A. நுண்திறன்** B. புலன்காட்சித் திறன்
   C. பொறிதிறன் D. இடவாற்றல்

5. மாஸ்லோவின் படிநிலைத் தேவைகள் கோட்பாட்டின் படிகளின் எண்ணிக்கை
   A. 6 **B. 7**
   C. 8 D. 5

6. உளவியல் என்ற சொல்லிற்கான சரியான பரிணாம வளர்ச்சி நிலைகளை தேர்ந்தெடுக்கவும்.

| | முதல் நிலை | இரண்டாம் நிலை | மூன்றாம் நிலை | நான்காம் நிலை |
|---|---|---|---|---|
| **A.** | **ஆன்மாவியல்** | **மனவியல்** | **நனவுநிலையியல்** | **நடத்தையியல்** |
| B. | ஆவியியல் | மனவியல் | நனவுநிலையியல் | நடத்தையியல் |
| C. | நனவுநிலையியல் | ஆன்மாவியல் | மனவியல் | நடத்தையியல் |
| D. | ஆன்மாவியல் | நனவுநிலையியல் | மனவியல் | நடத்தையியல் |

7. கோடிட்ட இடத்தை சரியான விடையை தேர்ந்தெடுத்து நிரப்பிடவும்.
ஓர் அறிவியல் பாட ஆசிரியர் ஒரு தாவரத்தினை காண்பித்து அதன் பாகங்களைக் கற்பிக்கிறார். இதனை ஆசிரியர் __________ உளவியல் கோட்பாட்டினை பயன்படுத்துவதாக ஊகிக்கலாம்.
A. ஹல்லின் முறையான நடத்தைக் கோட்பாடு B. ஹெபின் நரம்பு மற்றும் தசையிக்க கோட்பாடு
**C. கெஸால்ட்டின் ஓட்காட்சி கற்றல் கோட்பாடு** D. ஜங்கின் மன சிகிச்சை

8. பாலுணர்வு வெட்கப்பட வேண்டிய, அழுக்கான அல்லது கெட்டச் செயல் என்பதற்கு பதிலாக இயற்கையான, அவசியமான, உயிரியல் செயலியல்பாடு என தெரிவித்த மிகப்பெரிய உளவியலறிஞரின் பெயர் என்ன?
A. E.L. தாண்டைக் B. க்ர்ட்லுவின் C. ஜீன் பியாஜே **D. ஸிக்மண்ட் ∴பிராய்ட்**

9. மாறும் நிலை முரண்பாடுகள் குமரப்பருவத்தினரால் அடிக்கடி எதிர்கொள்வதற்கு காரணம்
A. அவர்கள் வயது வந்த நபராக நடத்தப்படுவது
B. அவர்கள் இன்னும் குழந்தையாக நடத்தப்படுவது
C. அவர்கள் வெறுக்கத்தக்க நபராக நடத்தப்படுவது
**D. அவர்கள் குழந்தையாகவோ அல்லது வயது வந்தோராகவோ கருதப்படாததால்**

10. குழந்தைத் திருமணங்கள் அரசினால் ஏற்றுக் கொள்ளபடுவதில்லை. ஏனெனில் தம்பதிகள் இதனை அடைந்திருக்க வேண்டும்.
A. சமூக முதிர்ச்சி B. உடலியல் முதிர்ச்சி
C. பாலியல் முதிர்ச்சி **D. சட்டபூர்வமான முதிர்ச்சி**

11. நெறிபிறழ் நடத்தைக் கோட்பாட்டை வழங்கியவர்
A. ஹூட்டன் B. ஆல்பர்ட் பன்டூரா
C. ஜான்டுவே D. முரே

12. மிக நல்ல மதிப்பெண் பெற்ற இனியாவின் பொறியியல், மருத்துவம் இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது (இரண்டுக்கும் ஊக்கப்படுத்தப்பட்ட நிலையில்) என்ற மனப் போராட்டத்தின் வகை __________ மனப்போராட்டம்.
A. விலகுதல் — அணுகுதல் B. அணுகுதல் — விலகுதல்
**C. அணுகுதல் — அணுகுதல்** D. விலகுதல் — விலகுதல்

13. ஒரு நபர் தன்னுடைய தனிப்பட்ட எல்லா சூழ்நிலைகளிலும் சுற்றுப்புறத்திற்கு ஏற்றவாறு திறம்பட ஒத்துப்போக உதவுவதே அறிவுரை வழங்குதல் என்று கூறியவர்
**A. கார்ல் ரோகர்ஸ்** B. ராபின்ஸன்
C. குட் D. எரிக்சன்

14. கீழ்க்கண்டவற்றில் எது படித்தல் திறன் உத்தியோடு தொடர்புடையது அல்ல
A. சூழ்நிலைத் தயார்படுத்துதல் B. குறிக்கோள் மையம்
**C. பகல் கனவு காணுதல்** D. மனதைத் தூண்டுதல்

15. அறிவுரை பகர்தல் வகைகளின் எண்ணிக்கை
A. 3 **B. 2**
C. 1 D. 5

16. குமரப்பருவத்தினரது வளர்ச்சி சார் செயல்களைத் தீர்மானிப்பது
A. அவர்கள் வாழும் கலாச்சார அமைப்பு B. அவர்களின் உடல் உறுப்புகளின் முதிர்ச்சி
C. தனிநபரின் விழுமிய அமைப்பு **D. இவை அனைத்தும்**

17. குழந்தைகளுக்கான கற்பித்தலில் ஆசிரியர் அதிகளவு படங்களை பயன்படுத்துவதன் காரணம்
A. தொடு சாயல்களை வளர்க்க **B. காட்சி சாயல்களை வளர்க்க**
C. புலனீடான சாயல்களை வளர்க்க D. மனச் சாயல்களை வளர்க்க

18. குழந்தைகளின் அறிவு வளர்ச்சியின் போது, அறிதிறன் அமைப்பில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தும் முறை

A. சமநிலைப்படுத்துதல்  B. இணங்குதல் மற்றும் பொருத்துதல்

**C. தன்வயப்படுத்துதல் மற்றும் பொருத்துதல்**  D. ஒருங்கமைத்தல்

19. மொழி அல்லது வார்த்தை தேவையற்றது

**A. கற்பனைச் சிந்தனைக்கு**  B. கருத்துருவாக்கச் சிந்தனைக்கு

C. இணைப்புச் சிந்தனைக்கு  D. புலனறிவுச் சிந்தனைக்கு

20. மனவெழுச்சியை உருவாக்கும் தூண்டுதல் ________ விளைவு உடையது.

**A. திரள்**  B. நேர்மறை

C. பூஜ்ய  D. எதிர்மறை

21. நுண்ணறிவு ஈவு 120 – 140 கொண்ட குழந்தைகள்

A. உயர்வானவர்கள்  **B. மிக உயர்வானவர்கள்**

C. சராசரியானவர்கள்  D. மேதைகள்

22. ‘இரு காரணிக் கோட்பாடு’ அறிமுகப்படுத்தியவர்

A. தாண்டைக்  B. வெர்னர்

**C. ஸ்பியர்மேன்**  D. கில்போர்டு

23. மொழியாற்றல் நுண்ணறிவு உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு பொருத்தமான தொழில்

A. கணித மேதைகள்  B. பொறியாளர்கள்

C. விளையாட்டு வீரர்கள்  **D. எழுத்தாளர்கள்**

24. மாஸ்லோ, உயிரியல் தேவைகள், பாதுகாப்புத் தேவைகள் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல் தேவைகளை எவ்வாறு குறிப்பிடுகிறார்?

A. மதிப்புத் தேவைகள்  **B. வளர்ச்சித் தேவைகள்**

C. அழகுணர்ச்சித் தேவைகள்  D. பற்றாக்குறைத் தேவைகள்

25. பரிசுகள் மற்றும் தண்டனைகள் எந்த வகையில் உதவுகிறது?

A. உள்ளூக்கம்  **B. வெளியூக்கம்**

C. உயர்வூக்கம்  D. குறைவூக்கம்

26. “சமூக வளர்ச்சி என்பது சமூகத் தொடர்புகளில் முதிர்ச்சி பெறுதல்” என்பது யாருடைய கூற்று?

**A. எரிக்சன்**  B. சுலைவன்

C. கோல்பர்க்  D. ஹர்லாக்

27. எந்த ஒரு விஷயத்தையும் அதன் உண்மை நிலையிலேயே பார்ப்பவர் __________ முதிர்ச்சி உடையவர்.

A. சமூக  **B. நடத்தை**

C. மனவெழுச்சி  D. ஒழுக்க

28. ஒரு மாணவன் 6 மாதங்களில் ஓவியப் பயிற்சியினைக் கற்கிறான் அவனது கற்றல் வளைகோடானது

A. நேர்மறை வளைவு  **B. ‘S’ வகை வளைவு**

C. மணி வடிவ வளைவு  D. எதிர்மறை வளைவு

29. வலுவூட்டல் என்ற பொதுவான வார்த்தை எந்தக் கற்றலில் பரிசினைக் குறிக்கின்றது.

A. ஆக்க நிலையுறுத்த கற்றல்  **B. S-R கற்றல்**

C. S-O-R கற்றல் D. செயல்படு ஆக்க நிலையுறுத்தல் கற்றல்

30. "ஆப்பிளை பழம் என்று பெரிடுதலுடன் மற்ற பழங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுதலும்" காக்னே கோட்பாட்டின் எவ்வகை உருவாக்கத்தைச் சேர்ந்தது

**A. கருத்துருவாக்கம்** B. இணைப்பு உருவாக்கம்

C. காட்சி உருவாக்கம் D. சொல் உருவாக்கம்

## பகுதி II
## தமிழ்

**இப்பகுதியில் 30 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

31. 'வலசை போதல்' என்பது எதைக் குறிக்கும்?

**A. பறவைகள் இடம் பெயர்தல்** B. யானைகள் இடம் பெயர்தல்

C. எறும்புகள் இடம் பெயர்தல் D. மேகங்கள் இடம் பெயர்தல்

32. ரேடியத்தின் அணு எடையைக் கண்டுபிடித்ததற்காக இரண்டாவது முறையும் நோபல் பரிசு பெற்றவர்

A. இராமானுஜம் B. முத்துலட்சுமி அம்மையார்

C. அன்னை தெரசா **D. மேரி கியூரி**

33. வரிசையை ஒழுங்குபடுத்தி சரியானதைத் தேர்வு செய்.

A. சேரநாடு முத்துடைத்து
சோழநாடு சான்றோருடைத்து
பாண்டியநாடு வேழமுடைத்து
தொண்டைநாடு சோறுடைத்து

B. சேரநாடு சான்றோருடைத்து
சோழநாடு முத்துடைத்து
பாண்டியநாடு சோறுடைத்து
தொண்டைநாடு வேழமுடைத்து

**C. சேரநாடு வேழமுடைத்து**
**சோழநாடு சோறுடைத்து**
**பாண்டியநாடு முத்துடைத்து**
**தொண்டைநாடு சான்றோருடைத்து**

D. சேரநாடு சோறுடைத்து
சோழநாடு வேழமுடைத்து
பாண்டியநாடு முத்துடைத்து
தொண்டைநாடு சான்றோருடைத்து

34. சரியான அமைப்பு முறையினைக் கண்டுபிடி.

**A. எனக்கும் அவருக்கும் ஆயிரம் இருக்கும்**

B. இருக்கும் எனக்கும் ஆயிரம் அவருக்கு

C. அவருக்கும் இருக்கும் ஆயிரம் எனக்கு

D. ஆயிரம் எனக்கும் இருக்கும் அவருக்கும்

35. "பால்வீதி" என்பது பலகோடி விண்மீன்களின் தொகுதி என்று மெய்ப்பித்தவர்

A. அப்துல் ரஹ்மான் **B. கலீலியோகலிலி**

C. கோபர் நிகசு D. அரிஸ்டாட்டில்

36. கீழே கொடுக்கப்பட்டவற்றுள் ஒன்று மற்றவற்றிலிருந்து மாறுபட்டுள்ளது. அது எது?



www.gfort.in

A. சங்கு B. மஞ்சு
C. சந்து **D. சுக்கு**

37. "சலவரைச் சாராவிடுதல் இனிதே" இவ்வடியோடு தொடர்பில்லாத இலக்கணக் குறிப்பு யாது?
A. இரண்டாம் வேற்றுமை விரி **B. இரண்டாம் வேற்றுமைத் தொகை**
C. ஈறுகெட்ட எதிர்மறை D. தொழில் பெயர்

38. 'முள் + நன்று' – எவ்வாறு புணரும்?
**A. முண்ணன்று** B. முள்ளன்று
C. முள் நன்று D. முன்னன்று

39. கீழே உள்ளவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?
A. கார் காலம் - ஆவணி, புரட்டாசி
B. குளிர் காலம் - ஐப்பசி, கார்த்திகை
**C. இளவேனிற் காலம் - ஆனி, ஆடி**
D. முன் பனிக் காலம் - மார்கழி, தை

40. "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" இக்குறளில் இடம் பெற்றுள்ள அணி யாது?
**A. எடுத்துக்காட்டு உவமை அணி**
B. தொழிலுவமையணி
C. உவமையணி
D. சொற்பொருள் பின்வருநிலையணி

41. 'இராஜ தண்டனை' என்ற வரலாற்று நாடக நூலின் ஆசிரியர்
A. பாரதிதாசன் **B. கண்ணதாசன்**
C. வாணிதாசன் D. பம்மல் சம்மந்த முதலியார்

42. 'ஆர்க்கியாலஜி' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் தருக.
A. மண்ணியல் ஆய்வு B. கல்வெட்டாய்வு
**C. தொல்லியல் ஆய்வு** D. விண்ணியல் ஆய்வு

43. சொற்பொருளறிக
நன்கணியர்
**A. நன்கு நெருங்கி இருப்பவர்** B. நன்கு கணிப்பவர்
C. நன்கு செய்பவர் D. நன்கு அணிகலன் அணிபவர்

44. கீழ்க்கண்ட பாடல் வரிக்கேற்ற சரியான வினாவைத் தேர்க.
'இளமையில் சிறந்தன்று மெய்ப்பிணி இன்மை'
A. இளமை உடம்பு எது? B. பிணியின்மை என்பது என்ன?
**C. உடம்பிற்கு எது சிறந்தது?** D. இளமையைக் காட்டிலும் எது சிறந்தது?

45. கடம் என்ற சொல்லின் பொருள் தருக.
**A. உடம்பு** B. தோற் கருவி
C. மிருதங்கம் D. மனம்

46. "பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று" இக் குறளின் ஈற்றசை வாய்பாடு யாது?
A. நாள் B. மலர்

www.gfort.in

**C. காசு** D. பிறப்பு

47. கீழே உள்ளவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?
A. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை – அளவடி
**B. இகழ்வார்ப் பொறுத்தல் தலை – குறளடி**
C. ஆடும் கடைமணி நா அசை யாமல் அகிலமெங்கும் – நெடிலடி
D. நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா – கழிநெடிலடி

48. "காக்க கொருளா அடக்கத்தை" – இவ்வடியோடு தொடர்பில்லாத இலக்கணக் குறிப்பு யாது?
A. வியங்கோள் வினைமுற்று B. இரண்டாம் வேற்றுமை விரி
**C. தொகுத்தல் விகாரம்** D. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

49. 'பஞ்சியொளிர் விஞ்சு குளிர்பல்லவம் அனுங்க' - இச் செய்யுளடியில் உள்ள தொடை விகற்பங்கள் யாவை?
**A. ஒரூஉ மோனை, இணை எதுகை, இணை இயைபு**
B. இணை மோனை, பொழிப்பு எதுகை, இணை இயைபு
C. கூழை மோனை, ஒரூஉ எதுகை, இணை மோனை
D. பொழிப்பு மோனை, கூழை எதுகை. ஒரூஉ இயைபு

50. 'பனை + ஓலை' - இச்சொற்கள் எவ்விதிகளின் படி புணரும்?
**A. i) இ ஈ ஐ வழி யவ்வும் .....**
**ii) உடல் மேல் உயிர்வந்தொன்றுவ தியல்பே**
B. i) ஏனை உயர்வழி வவ்வும் .....
ii) உடல் மேல் உயிர் வந்தொன்றுவ தியல்பே
C. i) தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும்
ii) உடல் மேல் உயிர்வந்தொன்றுவ தியல்பே
D. i) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
ii) உடல் மேல் உயிர்வந்தொன்றுவ தியல்பே

51. 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்ற பாராட்டிற்குரியவர்
**A. ஆறுமுக நாவலர்** B. கதிரை வேற்பிள்ளை
C. மறைமலையடிகள் D. வீரமா முனிவர்

52. குணித மேதை இராமானுஜம் திண்ணைப் பள்ளியில் படித்த ஊர்
A. ஈரோடு B. கும்பகோணம்
**C. காஞ்சிபுரம்** D. சென்னை

53. 'டெலஸ்கோப்' என்பதன் சரியான தமிழ்ச் சொல்லை கண்டறிக.
**A. தொலைநோக்கி** B. நுண்ணோக்கி
C. வெப்பமானி D. உருப்பெருக்கி

54. தென்னிந்தியாவின் ஏதென்ஸ் எனப் புகழ் பெற்ற நகர்

A. திருநெல்வேலி B. தூத்துக்குடி
C. கன்னியாகுமரி **D. மதுரை**

55. கால்டுவெல் மறைந்த ஊர்
A. உதகமண்டலம் **B. கொடைக்கானல்**
C. இடையன்குடி D. அயர்லாந்து

56. "சென்ற இடத்தாற் செலவிடாதீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு" - இக்குறளில் இடம் பெற்றுள்ள அளபெடை யாது?
A. செய்யுளிசை அளபெடை B. இன்னிசை அளபெடை
C. ஒற்றளபெடை **D. சொல்லிசை அளபெடை**

57. 'அறிந்தனன்' எனும் பதத்தில் எவ்வெவ் உறுப்புகள் உள்ளன.
**A. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்**
B. பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, விகாரம்
C. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, விகாரம்
D. பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை

58. கீழே உள்ளவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது.
A. கருவியாகு பெயர் - யாழ் கேட்டு மகிழ்ந்தேன்
B. காரியவாகு பெயர் - நன்னூல் கற்றேன்
**C. தானியாகு பெயர் - ஒரு கிலோ என்ன விலை?**
D. கருத்தாவாகு பெயர் - திருவள்ளுவரைப் படித்தாயா?

59. கீழுள்ளவற்றுள் சேய்மைச் சுட்டு எது?
A. இப்பக்கம் B. அப்பக்கம்
**C. உப்பக்கம்** D. எப்பக்கம்

60. "ஆகாறளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறகலாக் கடை" - இக்குறளில் திருவள்ளுவர் கையாண்டுள்ள இலக்கிய நயத்துடன் இரு முறை பொதிந்துள்ள இலக்கணக் குறிப்பு யாது?
A. அடி எதுகை மற்றும் வினைத்தொகை
**B. அடி எதுகை மற்றும் ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்**
C. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் மற்றும் தொழில்பெயர்
D. வினைத்தொகை மற்றும் ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

www.gfort.in

# PART III
# ENGLISH

61. Parenthesis are
  A. Mark of interrogation
  B. Mark of exclamation
  **C. Mark of brackets**
  D. Mark of quotation marks

62. A paraphrase of a passage should be
  A. Of specific length compared to the original passage
  B. Much shorter than the original passage
  C. Much longer than the original passage
  **D. No hard and fast rule for the length**

63. Body language is considered as vehicle of communication along with voice and pitch. If one leans forward it is interpreted as
  **A. Wishing to get involved**
  B. Feeling uneasy
  C. Lack of confidence
  D. Showing restlessness

64. Which is the "longest pause"?
  A. Apostrophe
  B. Dash
  C. Hyphen
  **D. Full-stop**

65. The phrase "Visually Challenged" is used as
  A. Euphonymous word
  B. Clipping word
  **C. Euphemistic word**
  D. Blending word

66. Collecting food for cattle is known as
  A. grazing
  B. foraging
  C. fostering
  **D. foraying**

67. Which pair will suit the following sentence?
  _______ your tongue or you will keep spoiling your _______ make-up?
  A. Bridal, bridle
  B. Brittle, bridal
  **C. Bridle, bridal**
  D. Broil, bridal

68. The phrasal verb 'peter out' means
  A. Send peter out
  **B. To decrease**
  C. To Urge
  D. To progress

69. Suffixes are usually
  **A. unstressed**
  B. strongly stressed
  C. weakly stressed
  D. stressed

70. Select the correct active voice of the sentence.

www.gfort.in

"I have not been informed"

A. You will not inform me
B. They will not inform me
C. None of you will inform me
**D. None of you have informed me yet**

71. Factual descriptions of an event or incident are called

**A. Reports** B. Articles
C. Records D. Registers

72. The return address refers to

A. The editor's address **B. Sender's address**
C. Receiver's address D. Principal's address

73. "O, ye wheels"
"Stop! Be silent for today"

A. Simile B. Metaphor
**C. Personification** D. Oxymoron

74. In which of the combination the letter 'h' is pronounced?

A. exhibit-exhilarate B. rhetoric-khaki
C. heir-hour **D. hostel-hostile**

75. Choose the generic term of "Forks, knives and spoons".

A. Stationery B. Grocery
**C. Cutlery** D. Crockery

76. Choose the correct sentence.

**A. Two of my sisters-in-law are staying with me**
B. Two of my sister-in-laws are staying with me
C. Two of my sister-in-laws is staying with me
D. Two of my sisters-in-laws are staying with me

77. Identify the grammatical function of the underlined part of the sentence.

He ran <u>through the wooden door</u>.

A. Adverb **B. Prepositional phrase**
C. Adjective phrase D. Verb

78. Fill in the blank choosing the correct word.

He is an ________ of the school.

A. alumni B. alumna
C. alumnae **D. alumnus**

79. Fill in the blank with the correct form of the verb.

www.gfort.in

I ________ on Thursday. But on Thursday I had terrible cold. So I decided to wait till Saturday.

**A. was to have left** B. am to leave
C. would leave D. will leave

80. Find out the pair of words with the combination of 'adverb + noun'.
A. Dark room, mad man B. Chewing gum, dancing girl
**C. Upshot, forefinger** D. Search light, play thing

81. Extensive reading, if properly guided will
A. Create love for doing exercise
**B. Create love for extra-reading**
C. Create love for writing English
D. Create love for listening English

82. Twenty six letters of English alphabets do the work of _______ sounds.
A. Forty three B. Forty two
C. Forty **D. Forty four**

83. Listening is a process of hearing with
**A. Understanding, interpreting and responding**
B. Responding, understanding and interpreting
C. Interpreting, responding and understanding
D. Understanding, responding and interpreting

84. Which statement is incorrect?
A. Acronyms can be called as alphabeteisms
B. Acronyms are pronounced as words
C. Acronyms are formed from the initial letters
**D. Acronyms are antonyms to abbreviations**

85. In dictionary V (pp) means
A. Verb present particle B. Verb past tense
**C. Verb past participle** D. Phrasal verb

86. Choose the correct word order.
A. You and Rachel and I can expect promotion
B. Rachel and I and you can expect promotion
**C. Rachel and you and I can expect promotion**



www.gfort.in

D. I and Rachel and you can expect promotion

87. Add the correct question tag to the given sentences.
Let us thank our teachers …..

A. Shan't we? B. Won't we?
**C. Shall we?** D. Can we?

88. Fill in the blank with the correct auxiliary verb.
Seldom _______ our teacher come late to school.

**A. do** B. did
C. have D. had

89. Add the right prefix to the word 'feeble' choosing from the options given.

A. – im B. – in
C. – dis **D. – en**

90. Polar-questions are

A. Yes/No questions B. 'Wh' questions
C. Multiple choice questions D. Short questions

www.gfort.in

## பகுதி IV
## கணக்கு மற்றும் அறிவியல்

**இப்பகுதியில் 60 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

**Note: Science question answers will be updated shortly**

91. எந்த நிலையில் கால்கிசின் மைட்டாஸிஸ் செல் பிரிதலை நிறுத்தி வைக்கிறது?

A. புரோ நிலை B. மெட்டா நிலை
C. அனா நிலை D. டீலோ நிலை

92. இரத்த புற்று நோய்க்கு காரணமான ஆன்கோஜீன்

A. L – மைக் B. எர்ப் B - 2
C. ஹாக்ஸ் II D. ரெட்

93. ஹெர்பெஸ்டெஸ் எட்வர்ட்சி என்பது எந்த விலங்கின் அறிவியல் பெயர்

A. ஓணான் B. கீரிப்பிள்ளை
C. சிலந்தி D. பழந்தின்னி வௌவால்

94. அதிக கொட்டும் திறனுடைய தேனி வகை

A. ஏபிஸ் டார்சேட்டா B. ஏபிஸ் ஃபுளோரியே
C. ஏபிஸ் இண்டிகா D. ஏபிஸ் மெல்லிஃபெரா

95. பெர்னிசியஸ் மலேரியாவை தோற்றுவிக்கும் காரணி

A. பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் B. பிளாஸ்மோடியம் ஒவேல்

C. பிளாஸ்மோடியம் மலேரியா D. பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரம்

96. டிஜிட்டாலிஸ் எனும் தாவரத்திலிருந்து டைஜாக்ஸின் எனும் உயிரிமருந்து தயாரிக்கப்படுகிறது. இது எந்நோயைக் குணப்படுத்தப் பயன்படுகிறது?

A. மலேரியா B. இருதய நோய்

C. இருமல் D. மனஇறுக்கம்

97. அனைத்து காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் அனைத்தும் வெவ்வேறு அளவுகளில் நீர் அளவைக் கொண்டுள்ளது. கீழ்க்கண்டவற்றுள் எதில் 73% நீர் உள்ளது என கண்டுபிடி.

A. வெள்ளரி B. பால்

C. உருளைக்கிழங்கு D. முட்டை

98. பெரும்பாலான தாவரங்கள் சுயச் சார்புத் தன்மை கொண்டவை. அவற்றில் பச்சையம் உள்ளதால் ஒளிச்சேர்க்கையின் மூலம் தாமாகவே உணவைத் தயாரிக்கின்றன. பச்சையம் காணப்படாத ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரம் எது என கண்டுபிடி.

A. மோனோடிராபா B. பெட்டுனியா

C. கஸ்குட்டா D. விஸ்கம்

99. பத்தாம் வகுப்பில் பயிலும் மாணவன், தான் படித்தவற்றை நினைவில் வைக்க இயலாமல் போகிறான். இதற்கு காரணமான வைட்டமின் குறைபாடு.

A. வைட்டமின் $B_{12}$ B. வைட்டமின் A

C. வைட்டமின் $B_5$ D. வைட்டமின் E

100. உயிரியத் தீர்வு முறையில் ஜிப்ரல்லா பியூசேரியம் சிதைக்கும் பொருள்

A. சயனைடு B. காட்மியம்

C. பாதரசம் D. குரோமியம்

101. Clன் அணு நிறை 35.5 கிராம்/மோல் எனில் ஒரு Cl அணுவின் நிறை ________ ஆகும்.

A. $5.90 \times 10^{-23}$ Kg B. $5.90 \times 10^{23}$ Kg

C. $5.90 \times 10^{-23}$ g D. $5.90 \times 10^{23}$ g

102. பாக்டீரியல் செல் – 1675 : ________ 1928.

A. வைரஸ் B. புரோட்டோசோவா

C. பூஞ்சைகள் D. ஆல்கா

103. ஓர் விவசாயி தாவர பயிர்ப்பெருக்க முறைகளைப் பயன்படுத்தி ஆப்பிள் பயிரிட்டார். இத்தகைய தாவரங்கள் அதிக வீரியத் தன்மையுடனும், பெரிய கனிகளையும், நீண்ட பெரிய வேர்களையும், பெரிய பூ, இலைகள், அதிகளவு சர்க்கரை கொண்ட விதைகள் போன்றவற்றையும் கொண்டிருந்தன. அவர் எத்தகைய விதைகளை பயிரிட்டு இருப்பார்?



www.gfort.in

A. ஆட்டோபாலி பிளாய்டி B. அல்லோபாலி பிளாய்டி
C. யூபிளாய்டி D. அன்யூபிளாய்டி

104. கீழே கொடுக்கப்பட்டவைகளுள் மூன்று கூறுகள் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையவை. ஒன்று மட்டும் வேறுபட்டு காணப்படுகிறது. அதை கண்டுபிடி.
A. லொமெண்டம் B. கிரிமோகார்ப்
C. ரெக்மா D. சிப்செல்லா

105. காடுகளை அழிப்பதால் ஏற்படும் மிகப்பெரும் தீய விளைவு
A. வனவிலங்குகளின் இருப்பிடம் அழிதல்
B. வனச்சொத்துகள் அழிதல்
C. மண் அரிப்பு
D. பொருளாதார மதிப்புள்ள தாவரங்கள் அழிதல்

106. கீழ்க்கண்டவற்றுள் எது பெர்ரோ காந்த பொருள்?
A. பிஸ்மத் B. நிக்கல்
C. அலுமினியம் D. குவார்ட்ஸ்

107. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?
A. மின்னோட்டத்தின் SI அலகிற்கான குறியீடு A
B. மின்னோட்டத்தின் SI அலகிற்கான குறியீடு amp
C. மின்னோட்டத்தின் SI அலகிற்கான குறியீடு am
D. மின்னோட்டத்தின் SI அலகிற்கான குறியீடு a

108. ஒலி எப்பொருளின் வழியே வேகமாக பரவும்?
A. திரவங்கள் B. வாயுக்கள்
C. திடப்பொருட்கள் D. அனைத்தும்

109. உயிருள்ள ஜீவராசிகள் சுவாசித்தல் __________ வகை வினையாகும்.
A. வெப்ப உமிழ் B. வெப்ப கொள்
C. ஒளிச்சிதைத்தல் D. மின்வேதி

110. கண்ணாடி பாட்டில்களிலோ அல்லது சிலிகா பாட்டில்களிலோ பாதுகாக்க முடியாத அமிலம் ___________ ஆகும். ஏனெனில் இந்த அமிலம் கண்ணாடியை அரிக்கும் தன்மை உடையது.
A. ராஜ திராவகம் B. HF
C. HCl D. HBr

111. கீழ்க்கண்ட இயற்கையின் விசைகளில் மிகவும் வலிமை குறைந்த விசை எது?
A. வலிமை மிக்க அணுக்கரு விசை B. வலிமை குறைந்த அணுக்கரு விசை
C. ஈர்ப்பியல் விசை D. மின்காந்த விசை

112. பந்து ஒன்று எறியப்பட்ட கணத்திலிருந்து 4 வினாடி காலத்தில் எறியப்பட்டவரால் திரும்பப் பெறப்படுகிறது எனில் அது அடைந்த பெரும உயரம், ($g = 10\ ms^{-2}$)
A. 20 m B. 10 m
C. 400 m D. 2 m

113. சூடேற்றும் இழையாக நிக்ரோம் கம்பி பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் அது
A. குறைந்த மின்தடை எண் உடையது
B. அதிக உருகுநிலை உடையது
C. எளிதில் ஆக்ஸிகரணத்திற்கு உள்ளாகும்
D. அனைத்தும்

114. நிலை மின்துாண்டல் பயன்படுத்தப்படுவது
  A. மாறுதிசை மின்னோட்ட மின்னியற்றி
  B. மின்மாற்றி
  C. நேர்திசை மின்னோட்ட மின்னியற்றி
  D. வான் - டி – கிராப் மின்னியற்றி

115. ஒரு இரயில் வண்டி நிறுத்தம் 'A'யில் இருந்து நிறுத்தம் 'B'க்கு நேர்கோட்டுப் பாதையில் 40 கி.மீ./மணி என்ற வேகத்தில் செல்கிறது. மீண்டும் நிறுத்தம் 'A'க்கு 60 கி.மீ./மணி என்ற வேகத்தில் திரும்புகிறது. அதன் சராசரி திசைவேகம்.
  A. சுழி  B. 50 கி.மீ./மணி
  C. 45 கி.மீ./மணி  D. 55 கி.மீ./மணி

**Average speed formula =** $\frac{2xy}{x+y} = \frac{2\times 60\times 40}{100} = 48km/hr$

116. கீழ்க்கண்டவற்றில் எது மற்றவைகளிலிருந்து மாறுபட்டது?
  A. $\pi$  B. $\frac{22}{7}$
  C. $e$  D. $\sqrt{2}$

117. $(10x+3++(10y+5)=11(x+y)$ எனில் $(x+y)$ = ?
  A. 2  B. 3
  C. 5  **D. 8**

118. $f(x)$ என்ற பல்லுறுப்புக் கோவையை $3x+2$ ஆல் வகுக்க கிடைக்கும் மீதி
  **A.** $f\left(-\frac{2}{3}\right)$  B. $f\left(\frac{2}{3}\right)$
  C. $f\left(-\frac{3}{2}\right)$  D. $f\left(\frac{3}{2}\right)$

119. கீழ்க்கண்டவற்றில் எது பல்லுறுப்புக் கோவையல்ல?
  **A. 0**  B. $-12x^3+yz^2+\sqrt{2}x$
  C. $-2xy^{-2}+3\sqrt{x}$  D. $3x+7$

120. $\left(2\sqrt{2}\right)^{\sqrt{3}+\frac{5}{2}} \div \left(\sqrt{2}\right)^{\sqrt{3}-\frac{1}{2}}$ ன் மதிப்பு
  **A.** $2\sqrt{2}$  B. $\sqrt{2}$
  C. 2  D. 8

121. அம்மோனியம் குளோரைடு, சோடியம் குளோரைடு சேர்ந்து உள்ள கலவையை தனித்தனியே பிரித்தெடுக்க பயன்படும் சரியான முறை
  A. படிகமாக்கல்  B. காய்ச்சி வடித்தல்
  C. பின்ன காய்ச்சி வடித்தல்  D. பதங்கமாதல்

122. ஒரு கரைசலின் ஹைட்ராக்சைடு அயனியின் செறிவு $0.01 \times 10^{-9}$ M. எனில் கரைசலின் pH மதிப்பு



www.gfort.in

A. 3 B. 9
C. 11 D. 4

123. அதிக அளவு காற்றுடன் மீத்தேன் எரிந்து தரும் விளைபொருட்களின் சரியான சமன்பாடு
A. மீத்தேன் $\rightarrow$ கார்பன்டை ஆக்சைடு + நீராவி
B. மீத்தேன் + ஆக்ஸிஜன் $\rightarrow$ கார்பன்டை ஆக்சைடு + ஹைட்ரஜன்
C. மீத்தேன் + காற்று $\rightarrow$ கார்பன் + ஹைட்ரஜன்
D. மீத்தேன் + ஆக்ஸிஜன் $\rightarrow$ கார்பன்டை ஆக்சைடு + நீராவி

124. கீழ்கண்ட இடைநிலை உலோக அயனிகளில், ஓர் வரிசையில் உள்ள அயனிகளின் கடைசி வட்டப் பாதையில் எலக்ட்ரான் அமைப்பு $3d^5$ இக்குறிப்பிட்ட ________ வரிசை ஆகும் (அணு எண் Mn = 25. Fe = 26, Co = 27)
A. $Mn^{3+}, Fe^{2+}, Co^{3+}$
B. $Mn^{2+}, Fe^{3+}, Co^{4+}$
C. $Mn^{+}, Fe^{2+}, Co^{2+}$
D. $Mn^{3+}, Fe^{4+}, Co^{+}$


www.gfort.in

125. கீழ்க்கண்ட வினைகளில் காற்றில்லாச் சூழலில் வறுத்தல் வினைக்கான சரியான சான்று.
A. $2Cu + 4HCl + O_2 \rightarrow 2CuCl_2 + 2H_2O$
B. $3Fe + 2O_2 \rightarrow Fe_3O_4$
C. $MgCO_3 \rightarrow MgO + CO_2$
D. $2ZnS + 3O_2 \rightarrow 2ZnO + 2SO_2$

126. 40 மீ × 36 மீ அளவுகடையுடைய ஒரு செவ்வக வடிவ வயலின் ஒரு மூலையில் ஒரு பசு 14 மீ நீளமுள்ள கயிறு ஒன்றால் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டுள்ளது. பசு மேயாத பகுதியின் பரப்பளவு என்ன?
A. 1226 $m^2$ B. 1246 $m^2$
C. 1266 $m^2$ **D. 1286 $m^2$**

127. வட்ட வடிவிலான ஒரு தாமிர கம்பியின் ஆரம் 35 cm இது ஒரு சதுர வடிவில் வளைக்கப்படுகிறது எனில் அச்சதுரத்தின் பக்கம்
A. 35 cm B. 45 cm
**C. 55 cm** D. 65 cm

128. ஒரு இரும்புக் கம்பியானது படத்தில் உள்ளவாறு ஒரு முக்கோண வடிவில் மாற்றப்பட்டுள்ளது. இதை ஒரு சதுர வடிவில் வளைக்கும் போது அதன் ஒரு பக்க நீளம் என்ன?




**A. 4 cm** B. 5 cm
C. 6 cm D. 7 cm

129. பின்வருவனவற்றுள் எது தங்க விகிதம் என அழைக்கப்படுகிறது?

A. 1 : 2.6 **B. 1 : 1.6**
C. 1 : 3.6 D. 1 : 4.6

130. வடிவியலின் தந்தை யார்?

A. காஸ் **B. யூக்ளிட்**
C. பால் எர்டாஸ் D. ராமானுஜம்

131. $\frac{32\times4+\sqrt{x}}{36}=4$ எனில் x-ன் மதிப்பு

A. 16 B. 196
**C. 256** D. 296

132. எது சரியானதல்ல?

A. $-\frac{8}{9}\times\left(-\frac{4}{7}\right)=-\frac{4}{7}\times\left(-\frac{8}{9}\right)$

B. $-\frac{1}{2}\times\left[\frac{3}{7}+\left(-\frac{4}{3}\right)\right]=\left[-\frac{1}{2}+\frac{3}{7}\right]+\left[-\frac{4}{3}\right]$

**C.** $-\frac{1}{2}\div\left[\frac{3}{7}\div\left(-\frac{4}{3}\right)\right]=\left[-\frac{1}{2}\div\frac{3}{7}\right]\div\left[-\frac{4}{3}\right]$

D. $-\frac{1}{2}\times\left[\frac{3}{7}\times\left(-\frac{4}{3}\right)\right]=\left[-\frac{1}{2}\times\frac{3}{7}\right]\times\left[-\frac{4}{3}\right]$

133. $5/16$, $3/8$, $1/4$, $1/2$ இவற்றில் சிறியது எது?

A. $1/2$ **B. $1/4$**
C. $3/8$ D. $5/16$

134. கார்ட்டீசியன் தளத்தில் A(0, 0), B (3, 0), C(x, y) மற்றும் D(0, 5) என்ற புள்ளிகள் செவ்வகத்தை குறித்தால் C(x, y)ன் மதிப்பு

**A. (3, 5)** B. (5, 3)
C. (-5, 3) D. (3, -5)

135. வட்ட விளக்கப் படத்தில் வட்டமையத்தில் கோண அளவுகளின் கூடுதல்

A. $90^\circ$ B. $180^\circ$
C. $270^\circ$ **D. $360^\circ$**

136. $1^3+2^3+3^3+4^3+5^3+6^3+7^3+8^3+9^3$ க்கு சமமானது

A. $42^2$ B. $43^2$
C. $44^2$ **D. $45^2$**



www.gfort.in

137. 99980001ன் வர்க்கமூலம்

A. 9991 **B. 9999**

C. 9199 D. 1999

138. $\frac{0.000007}{0.00001275}$ன் தோராய மதிப்பு

A. 5.3 **B. 0.5**

C. 5.0 D. 0.05

139. $\frac{\sqrt[3]{1000}-\sqrt[2]{64}}{\sqrt[3]{729}-\sqrt[2]{81}}$ ன் மதிப்பு

A. 0 B. 2

**C. வரையறுக்கப்படவில்லை** D. இவற்றில் எதுவும் இல்லை

140. இவற்றில் எது தொடர்புடையதல்ல?

A. $33\frac{1}{3}$ % B. 1 : 3

C. 0.33 **D. $33\frac{1}{3}$**

141. 2,400 ச.மீ. நிலத்தை 12 வேலையாட்கள் 10 நாட்களில் உழுது முடிப்பர். 5,400 ச.மீ. நிலத்தை 18 நாட்களில் உழுவதற்கு எத்தனை வேலையாட்கள் தேவை?

A. 10 **B. 15**

C. 20 D. 25

142. அஷ்வின் ஒவ்வொரு மாதத் துவக்கத்திலும் ரூ. 200ஐ ஓர் அஞ்சலகத்தில் 5 ஆண்டுகளுக்கு செலுத்தி வந்தார். முடிவில் அவர் ரூ. 13,830 பெற்றார் எனில், வட்டி விகிதம்

A. 4% B. 5%

**C. 6%** D. 7%

143. ஒரு சதுரத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் 50% அதிகரித்தால், அதன் பரப்பளவு எத்தனை சதவீதம் அதிகரிக்கும்?

A. 50 B. 100

**C. 125** D. 150

144. ஒரு வியாபாரத்தில் இரண்டு பங்குதாரர்கள் முறையே ரூ. 12,500 மற்றும் ரூ. 8,500 முதலீடு செய்கிறார்கள். அதில் ஒரு பங்குதாரர் மற்றொரு பங்குதாரரை காட்டிலும் இலாபத்தில் ரூ. 300 அதிகம் பெறுகிறார் எனில் மொத்த இலாபத் தொகை என்ன?

A. Rs. 1,475 **B. Rs. 1,575**

C. Rs. 1,675 D. Rs. 1,570

145. ஒரு சரிவகத்தில் இணைப் பக்கங்களின் கூடுதல் 18 செ.மீ. குத்துயரம் 15 செ.மீ எனில் அதன் பரப்பளவு

A. 105 செ.மீ$^2$ B. 115 செ.மீ$^2$

C. 125 செ.மீ$^2$ **D. 135 செ.மீ$^2$**

146. $\Delta ABC$ல் $\angle A$ ஆனது $\angle B$ஐ விட $24^\circ$ அதிகம் மேலும் $\angle C$ன் வெளிக்கோணம் $108^\circ$ எனில் $\angle A =$



www.gfort.in

A. 46˚ B. 56˚
**C. 66˚** D. 76˚

147. ஒரு குறிப்பிட்ட அசலானது 6 வருடங்களில் ரூ. 8,880 ஆகவும் 4 வருடங்களில் ரூ. 7,920 ஆகவும் மாறுகிறது எனில் வட்டிவீதம்

A. 5% B. 6%
C. 7% **D. 8%**

148. 250 மாணவர்கள் உள்ள ஒரு பள்ளியில், 55 மாணவர்கள் கூடைப் பந்தையும் 75 மாணவர்கள் கால்பந்தையும், 63 மாணவர்கள் எறிபந்தையும் மீதமுள்ளவர்கள் கிரிக்கெட்டையும் விரும்புகின்றனர் எனில் கூடைப்பந்தை விரும்பும் மாணவர்களின் சதவீதம் என்ன?

A. 32% B. 42%
C. 12% **D. 22%**

149. 60 கி.மீ. வேகத்தில் செல்லும் ஒரு மகிழ்வுந்து ஒரு குறிப்பிட்ட தூரத்தை 5 மணி நேரத்தில் கடக்கிறது. அதே தூரத்தை 40 கி.மீ. வேகத்தில் சென்றால், எவ்வளவு நேரத்தில் கடக்கும்?

A. $6\frac{1}{2}$ hrs **B. $7\frac{1}{2}$ hrs**
C. $8\frac{1}{2}$ hrs D. $9\frac{1}{2}$ hrs

150. ஒரு தொட்டியை இரு குழாய்கள் தனித்தனியே முறையே 30 நிமிடங்கள், 40 நிமிடங்களில் நிரப்புகின்றது. மற்றொரு குழாய் நீர் நிரம்பிய தொட்டியை 24 நிமிடங்களில் காலி செய்யும். தொட்டி காலியாக இருந்து இம்மூன்று குழாய்களும் ஒரே சமயத்தில் திறந்து விடப்பட்டால் அத்தொட்டி எத்தனை மணி நேரத்தில் நிரம்பும்?

**A. 1 மணி** B. 2 மணி
C. 3 மணி D. 4 மணி

**Note: Science question answers will be updated shortly**

www.gfort.in

**JOIN US TO JOIN THE PRESTIGIOUS STATE SERVICES**

**Further Details Contact**

# APPOLO STUDY CENTRE

**25, Nandhi Loop Street, West C.I.T.NAGAR,**
**Chennai-600035.**
**(Near: T.Nagar Bus Stand, Landmark: Nandhi Statue)**
**Email:** enquiryatappolo@gmail.com
appolosupport.com, www.appolotraining.com
**www.appolo.pbworks.com**
**PH: 24339436, 42867555, 9840226187, 9789918859**

www.gfort.in